பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 09 | செவ்வாய்க்கிழமை | 24.12.2024 | அதிர்வு 144 |
|---|---|---|---|---|---|

## யாழில் குடும்பஸ்தர் மயங்கி வீழ்ந்து சாவு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிளில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

05



# மஹிந்தவுக்கு ஏதும் நடந்தால் அநுர அரசே முழுப் பொறுப்பு!

## மொட்டுவின் உறுப்பினர் மனோஜ் தெரிவிப்பு




"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று புலனாய்வுப் பிரிவு பல தடவைகள் அறிக்கை சமர்ப்பித்துள்ள பின்னணியில் இராணுவப் பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டுள்ளமை தவறான தீர்மானமாகும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு ஏற்க வேண்டும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

05

# யாழில் எலிக்காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள்!

## தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை வெற்றி என்கிறார் கேதீஸ்வரன்




(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஏற்பட்டிருந்த எலிக்காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது எலிக்காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைவடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வுநடவடிக்கைகள்முழுஅளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அத்துடன், தடுப்பு மருந்து

05




கடந்த ஆட்சிக் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூர் அரசியல்வாதிகளின் செல்வாக்கோடு – ஆதரவோடு – பெரும் எண்ணிக்கையில் தொடங்கப்பட்ட மதுபானச் சாலைகளுக்கு எதிராக மக்கள் போராட்டம், காலதாமதமாகி இப்போதேனும் இடம் பெறும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சியில் அதிகரித்த மதுபான கடைகளுக்கு எதிராக நீண்ட தாமதத்தின் பின்னர் இப்போது மக்கள் போராட்டம் வெடித்திருக்கின்றது.

மது போதைக்கு எதிரான இயக்கம் மற்றும் வடக்கு – கிழக்கு மறுவாழ்வு அமைப்பு ஆகியன ஏற்பாடு செய்துள்ள போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியிலும், மதுபான சாலைகளுக்கு முன்னாலும் முன்னெடுக்கப்பட இருப்பதாகத் தெரிய வருகிறது.

பெரும் எண்ணிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இத்தகைய மதுபானச் சாலைகள் முன்னைய அரசின் காலத்தில் – அரசியல்வாதிகளின் பரிந்துரையோடு – திறக்கப்பட்டன.

05





# பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான கட்டமைப்பொன்று அவசியமாகும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கான ஆசிய பசுபிக் குழுவின் மூலம் நடத்தப்பட இருக்கும் இலங்கையின் பரஸ்பர மதிப்பீட்டிற்கான முக்கிய தயார்படுத்தல் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினதும் நிதியியல் உளவறிதல் பிரிவினதும் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் முகவராண்மை நிறுவனங்கள் உள்ளடங்கலாக தொடர்புள்ள 24 நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை நிதியியல் உளவறிதல் பிரிவு இங்கு வலியுறுத்தியது.

இலங்கையின் நிதிக்கட்டமைப்பு ஸ்தீரத்தன்மையைப் பாதுகாத்து நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேச நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் அதன் ஊடாக சாதகமான பெறுபேறுகளை பெறவும் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான மற்றும் செயற்திறனுள்ள கட்டமைப்பொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.





# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, பக்கமுன, புத்துருவயாய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பக்கமுன, புத்துருவயாய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்று அதிகாலை தனது வீட்டுக்கு வெளியே சென்றுள்ள நிலையில் காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.





# வடக்கில் சில அரச அதிகாரிகள் மனிதநேயமற்று நடக்கின்றனர்

## அவர்களை வைத்துக்கொண்டு மக்களுக்குச் சேவையாற்றுவது சவாலான விடயம் என்று ஆளுநர் வேதநாயகன் கடும் விசனம்

"வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு சில அதிகாரிகளை வைத்துக்கொண்டு எங்கள் மாகாணத்து மக்களுக்கு சேவை செய்வதென்பதும் முன்னேற்றுவதென்பதும் மிகச் சவாலான விடயமாகவே இருக்கின்றது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கரைச்சிப் பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலாசாரப் பெருவிழாவும், கரைஎழில் நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

"கிளிநொச்சி மாவட்ட செயலராக நான் பணியாற்றிய போது இறுதிக்கட்டப்போர் ஆரம்பமானது. இந்த மாவட்ட மக்களுடன் நானும் இடம்பெயர்ந்து செல்லவேண்டியிருந்தது. அப்படியானதொரு மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்பதில் பெரும் மகிழ்வடைகின்றேன். எந்த வசதிகளும் இல்லாமல் அன்றைய எமது பணிக்காலம் இருந்தது. ஆனாலும் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கியிருந்தோம்.

உங்களுடைய தற்போதைய மாவட்ட செயலர் சு.முரளிதரன் நேர்மையான ஒருவர். மக்களின் துன்பங்களை அறிந்து அவர்கள் துயர்துடைக்கக்கூடிய ஒருவர். அவர் உங்களுக்கு மாவட்ட செயலராகக் கிடைத்தமை சிறப்பானது.

இன்றைய இளையோர்களிடம் மற்றவர்களை மதிக்கும், உதவி செய்யும் பண்புகளைக் காண முடியவில்லை. தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்க முடியாத நிலைமை இருக்கின்றது. வீதிகளில் குப்பை போடுகின்றோம். வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்களை ஆக்கிரமித்து கட்டடங்களைக் கட்டுகின்றோம். ஒழுக்கமில்லாத சமுதாயமாக நாங்கள் மாறிக்கொண்டு போகின்றோம். மிகக் கவலையாக இருக்கின்றது.

விழா மண்டபத்தை இந்தப் பிரதேச செயலக அலுவலர்களே அதிகமாக நிரப்பிக்கொண்டிருப்பதாக பிரதேச செயலரும், மாவட்டச் செயலரும் என்னிடம் சொன்னார்கள். உண்மையில் வேதனையாக இருக்கின்றது. எமது பிரதேசத்தின் பண்பாட்டு விழாவுக்கு வருகின்றார்கள் இல்லை. ஆனால், குத்துப்பாட்டுக்களுடன் நடக்கும் நிகழ்வுகளுக்கு அள்ளுகொள்ளையாகச் செல்கின்றார்கள்.

ஏனையவர்களுக்கு உதவி செய்வதில்தான் உண்மையான சந்தோசம் இருக்கின்றது. ஆனால் இன்று எம்மில் பலர் பணம்தான் சந்தோசம் என்று நினைக்கின்றார்கள். பணம் சந்தோசத்தை தராது. ஒருவனுக்கு நாங்கள் உதவி செய்தால் எங்களுக்கு பல மடங்கு பல்வேறு வழிகளில் திருப்பி உதவி கிடைக்கும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறருக்கு உதவி செய்யவேண்டும். அதேபோல் எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. மற்றையவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்த வேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலருக்கு அடுத்த நிலையிலுள்ள ஒரு அதிகாரிக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாக அணுகுமாறுகூறி விட்டு அவர்களை அவரிடம் அனுப்பினேன். அந்த அதிகாரி தனது அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு ஆசிரியர்களை, இரவு 7 மணிக்குத்தான் அலுவலகத்தில் சந்தித்திருக்கின்றார். ஆசிரியர்களை மிக மோசமான முறையில் பேசி திருப்பி அனுப்பியிருக்கின்றார். இவ்வாறான அலுவலர்கள் எமது மாகாணத்தில் எனக்குக் கீழ் இருக்கின்றார்கள் என்பதை நினைக்கும்போது வெட்கமாக இருக்கின்றது.

எங்களுக்குப் பதவிகள் தரப்பட்டது மக்களுக்குச் சேவை செய்யவே. அதை சகல அலுவலர்களும் மனதிலிருத்துங்கள்.

உங்களிடம் சேவைக்காக பொதுமக்கள் வரும்போது, அந்தப் பொதுமகனாக நீங்கள் இருந்தால் எப்படி நடந்து கொள்வீர்கள்? அப்போது உங்களுக்கு பேசுவதற்கு அல்லது மனிதநேயமற்று நடப்பதற்கு மனம் வருமா? எனவே, தற்போதுள்ள சகல வசதிகள், ஆளணிகளை வைத்துக்கொண்டு எங்கள் மக்களுக்குச் சகலரும் சிறந்த சேவைகளை வழங்க முன்வரவேண்டும்." – என்றார்.













### ஹட்டன் பஸ் விபத்து

# சிகிச்சை பெற்று வந்த மேலும் 8 பேர் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றம்

ஹட்டன் – மல்லியப்பு பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்த நிலையில் டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 8 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக் கிழமை காலை, ஹட்டனில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 14 வயது சிறுவன் ஒருவன் உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் 53 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அவர்களில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 8 பேர் மேலதிகச் சிகிச்சைகளுக்காக நேற்று முன்தினம் நாவலப்பிட்டி பொது வைத்தியசாலைக்கும் கண்டி தேசிய வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், அந்த விபத்தில் காயமடைந்த பஸ் சாரதி சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புக்கு மத்தியில் தொடர்ந்தும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அந்த சாரதியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் பதில் நீதவான் எஸ்.ராமமூர்த்தி, உத்தரவிட்டார்.

மேற்படி பஸ் விபத்தில் காயமடைந்த 25 இற்கும் அதிகமானோர் தற்போது டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அந்த வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் அருள்குமரன் தெரிவித்துள்ளார்.




# ஐ.தே.க. மறுசீரமைப்பு அடுத்த மாதம் ஆரம்பம்

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பதற்குரிய ஆரம்பகட்ட செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதற்குக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பின் பச்சைக்கொடிகாட்ட மறுப்பதால் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைவு சாத்தியமான திசையை நோக்கி நகரவில்லை.

எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலை யானை சின்னத்தின் கீழ் எதிர்கொள்வதற்கு ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னதாக மறுசீரமைப்புக்கான ஆரம்பகட்ட திட்டங்கள் வெளியிடக்கூடும்.

அதன்பின்னர் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள கட்சி மாநாட்டிலேயே இறுதியான – உறுதியான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

# பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் மாரடைப்பால் உயிரிழப்பு!

(எஸ்.ரகுதீஸ்)

பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிய சார்ஜன் தர அதிகாரி ஒருவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தார்.

குருநாகலைச் சேர்ந்த ரவித்த ரங்கன திஸாநாயக்க (வயது 35) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

2007 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்ட அவர் பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றி வந்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நெஞ்சு வலி காரணமாக பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். எனினும், அவர் நேற்றுமுன்தினம் நண்பகல் உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளைப் பலாலி பொலிஸார் நெறிப்படுத்தினர்.



பிரேத பரிசோதனையில் மாரடைப்பால் மரணம் சம்பவித்தது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவற்றுக்கு எதிரான மக்கள் கருத்து நிலைப்பாடு பீறிட்டுக் கிளம்பிய போதிலும் கிளிநொச்சியில் அந்த மதுபான சாலைகளுக்கு எதிரான மக்கள் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மாறாக, அந்த மதுபான சாலை அமைப்புக்கு அரசியல்வாதிகள் ஆதரவளித்து வருகின்றனர் என்ற தோற்றம் வெளிப்படுத்தப்பட்டு வந்தது. இந்தச் சூழ்நிலையிலேயே இப்போது இந்தப் போராட்டம் இன்றைய தினம் முன்னெடுக்கப்படுகின்றது.

கிளிநொச்சியை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்தி கருத்து வெளியிட்டு வரும் சிறிதரன் எம்.பி. கனடா சென்றிருக்கும் சமயம் இந்தப் போராட்டம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

\+ + +

தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் ஆளாளாக்கு கண் மண் தெரியாமல் சேற்றை வாரி அள்ளி வீசித் தூற்றித் திட்டுவது சகஜம்தான்.

ஆயினும் தேர்தல் முடிந்த பின்னர் இந்தத் திட்டுக்களின் விளைவு வினையாக சில சமயங்களில் வந்து விடுவதுண்டு.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் ரெலோ உள்கட்சி மோதல் காரணமாக கட்சியின் பிரமுகர்களை மற்றொரு பிரமுகரான விந்தன் கனகரத்தினம் பொதுவெளியில் ஒரு வாங்கு வாங்கினார்.

யாழ். ஊடக மையத்திலும் பிறிதொரு சமூக ஊடகத்திலும் அவர் போட்டுப் பிடித்த கருத்துகளுக்கு எதிராக ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் 5 கோடி ரூபா மான நஷ்டம் வழங்கக் கோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார் என அறிய வருகின்றது.

அதே சமயம் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் இத்தகைய வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யத் தயாராகி வருகின்றார் என்றும் அறிய வந்தது.

விந்தன் கனகரத்தினத்தை சமூக ஊடகம் ஒன்றில் பேட்டி கண்ட ஊடகத் தரப்பு மீதும் வழக்கு நடவடிக்கை பாயக் கூடிய சூழல் உள்ளது.

தேர்தல் சமயத்தில் தமக்கு எதிராகப் பகிரங்கமாக கருத்து வெளியிட்ட ஒரு வர்த்தக பிரமுகருக்கு எதிராக வழக்கு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தயாராகி வருகின்றார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

தேர்தல் மழை ஓய்ந்தாலும் வழக்கு விவகாரம் தூவனமாகத் தொடரப் போகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தமக்குள் மோதிக் கொள்வார்கள். சட்டத்தரணிகள் பாடு கொண்டாட்டம். எப்படியும் அவர்களுக்கு வருமானம் நிச்சயம்.

## மஹிந்தவுக்கு ஏது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பிரபுக்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறித்து பாதுகாப்புத் தரப்பினரிடம் அறிக்கை பெற்றுக்கொண்டுள்ளது.

இதற்கமைய 2024.10.10ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.டி.விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷஷவின் பாதுகாப்பு தொடர்பில் மீளாய்வு குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறித்து புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த 13 அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டு 4 புலனாய்வுப் பிரிவின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு ஏன் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காரணிகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் ட்ரோன் கருவி ஊடான குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், அத்துடன் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரச சார்பற்ற அமைப்புக்களினால் திட்டமிட்ட தாக்கதல்கள் நடத்தப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் புலனாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வுப் பிரிவு சமர்ப்பித்த அறிக்கைகளைக் கவனத்தில்கொள்ளாமல் அரசு முறையற்ற வகையில் இராணுவப் பாதுகாப்பை முழுமையாக நீக்கியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு 100 அல்ல 1000 இராணுவத்தினரைப் பாதுகாப்புக்கு அமர்த்தினாலும் குறையேதுமில்லை. ஏனெனில் இராணுவத்தினர் தமது சொந்த ஊருக்குச் சவப்பெட்டியில் செல்லும் காலத்தை அவர்தான் முடிவுக்குக் கொண்டு வந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன,ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் மஹிந்த ராஜபக்ஷவை ஒப்பிட முடியாது. ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷ தேசியத்தைப் பாதுகாப்பதற்காகக் கடுமையான தீர்மானங்களை எடுத்தார்.

ஆகவே, மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் பிரிவினைவாத சக்திகள் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் இன்றும் செயற்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு ஏற்க வேண்டும்."

– என்றார்.

## யாழில் எலிக்காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கும் நடவடிக்கையும் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதால் இந்த எலிக்காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## யாழில் குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த தேவதாசன் உதயசேனா (வயது 64) என்பவரே உயிரிழந்தார்.

நீர்வேலியில் அமைந்துள்ள வாழைக் குலைச் சங்கத்துக்கு நேற்று திங்கட்கிழமை வாழைக்குலையைக் கொடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் அவர் சென்றுகொண்டிருந்தார். இதன்போது அவர் திடீரென வீதியில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இருதய வால்வு சுருக்கம் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# வடக்கு ஆளுநரை நேற்று சந்தித்த யாழின் புதிய கட்டளைத் தளபதி!

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் யகம்பத் நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இருவரும் பரஸ்பரம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். அத்துடன் ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட செயலராகப் பணியாற்றிய காலத்தில் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யகம்பத்தும் யாழ். மாவட்டத்தில் பணிபுரிந்தமையை நினைவுகூர்ந்தார்.

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வேண்டிய விடயங்கள் தொடர்பில் விரைவில் சந்தித்துக் கலந்துரையாடுவோம் என்று கட்டளைத் தளபதி ஆளுநரிடம் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் யகம்பத் கடந்த வெள்ளிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.










# தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதும் உள்ளூராட்சித் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை தேர்தல் திகதியை அறிவிப்பதற்கு சட்டரீதியான தடை நிலவுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டவுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்குள் திருத்தம் மேற்கொள்ளப்படும் என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இந்த சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டுவருமாறு தேர்தல் ஆணைக்குழு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சிடம் அண்மையில் கோரியிருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக முன்னதாக பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தது.

அதன்படி, மேற்படி தேர்தலுக்காக புதிய வேட்புமனுக்களை கோருவதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் இந்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

# கிழக்கில் வாழும் சிங்களவர்களைத் தூண்டி இனவாதத்தைப் பரப்பும் சாணக்கியன் எம்.பி.

## இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் சுமனரத்ன தேரர்





"கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களைத் தூண்டும் வகையிலும், இனவாதத்தைப் பரப்பும் விதத்திலுமே சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றத்தில் உரையாற்றி வருகின்றார்." – என்று அம்பிட்டிய சுமனரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இராசமாணிக்கம் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றாரா? இல்லை. மாறாக சிங்கள மக்கள் வாழும் பகுதியை தமது நிலப் பகுதியாக மாற்றிக்கொள்வது பற்றியே கதைத்து வருகின்றார்.

அப்பாவி தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள், அவர்களுக்குரிய வீதிப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் பற்றி அவர் கதைப்பதை நாம் எப்போதும் கண்டதில்லை. மயிலத்துமடு, திவுலபதான உட்பட சிங்களக் குடும்பங்கள் வாழும் பகுதியைப் பற்றியே அவர் பேசுகின்றார். வாழ்வாதாரம் பற்றி அவர் பேசவில்லை. மாறாக சிங்கள் மக்கள் வாழ்வது தமது தாயகத்துக்குப் பொருத்தமற்ற செயல் என்பதையே காட்டுவதற்கு அவர் விளைகின்றார்.

சிங்கள மக்களைத் தூண்டும் வகையிலும், அவர்களை விரட்டுவதையும் இலக்காகக்கொண்டே சாணக்கியன் கதைக்கின்றார். அவர் இனவாதத்தைப் பரப்புகின்றார். நாட்டை முன்னேற்றுவது பற்றி அவர் கதைப்பதில்லை." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆபத்துச் சூழல்

“நாட்டில் தற்போதுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்ற உறுதிமொழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.”- இவ்வாறு பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன கூறியிருக்கின்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காதலைமையிலானதேசியமக்கள்சக்தி அரசுக்கு தார்மீகக் கடப்பாடும், பொறுப்பும், வலிமையும், விருப்பும் முழு ஈடுபாடும் இருப்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பை உருவாக்குவோம், அதற்கு ஆணை தாருங்கள் என்று கேட்டு இலங்கை மக்களின் அபரிமிதமான ஆதரவுடன் அதிகாரத்துக்கு - ஆட்சிக்கு - வந்திருக்கும் அந்தத் தரப்புக்கு அதற்கான முழு ஆணையை இலங்கை மக்கள் வழங்கி இருக்கிறார்கள் - கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் மூலம்.

அவர்களுக்கு கிடைத்துள்ள மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு மேற்பட்ட நாடாளுமன்ற பலத்தோடு, புதிய அரசமைப்பை உருவாக்கவும், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அங்கீகாரத்தை பெறவும் அந்த அரசினால் முடியும் என்று நம்பப்படுகின்றது.

ஆனால் சிறுபான்மையினரான தமிழர்களைப் பொறுத்தவரை மிக நெருக்கடியான ஒரு பின்புலத்தில் இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்படவிருப்பது கவனிக்கத்தக்கது.

சுதந்திர இலங்கையில் 1972 இல் கொண்டு வரப்பட்ட குடியரசு யாப்பும், 1978 இல் கொண்டுவரப்பட்டு இப்போது வரை நடைமுறையில் இருக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஏற்படுத்திய தற்போதைய யாப்பும், தமிழர் தரப்பின் பங்களிப்பின்றி உருவாக்கப்பட்டவை. தமிழர் தேசத்தின் மீது தென்னிலங்கையால் வல்வந்தமாக அவை திணிக்கப்பட்டவை என்பது உலகறிந்த உண்மை. அதனால் தான் இது வரையான தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கு ஓரளவேனும் சர்வதேச அங்கீகாரமும் தார்மீக ஆதரவும் கிடைத்துவந்தது.

ஆனால, இப்போது தமிழர் தேசம் தன்னுடைய ஜனநாயக ஆணையைக் கணிசமான அளவுக்குத் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு வழங்கி உள்ள பின்னணியில், அத்தரப்பு - தன்னிச்சையாக, தம்மிஷ்டப்படி, உருவாக்கக்கூடிய அரசமைப்பு தமிழரின் பிரதிநிதித்துவமும் சேர்ந்து யாக்கப்பட்டதாக அங்கீகரிக்கப்படும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்பது மறுக்க முடியாத நிலைமை.

அத்தோடு இதுவரை குறைந்த பட்சம் மாகாண சபை முறைமை என்ற அதிகார பகிர்வு ஏற்பாட்டுக்கு வழி செய்துள்ள 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை வலியுறுத்தி நின்ற இந்திய அரசாங்கம் முதல் தடவையாக அதனை - அந்த 13ஆவது திருத்தத்தை - நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்துவதை கைவிட்டுள்ள சூழல் இது.

இந்தப் பின்புலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசு புதிய யாப்பை உருவாக்கும் போது அது விரும்பினால் குறைந்தபட்ச அதிகார பகிர்வுடன் கூடிய தற்போதைய மாகாண சபை திட்டத்தை கூட அடியோடு கைவிடக்கூடிய ஏது நிலை உள்ளது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் நடைமுறைக்கு கொண்டுவர இலங்கை அரசை இந்தியா நிர்பந்தித்த 13வது திருத்தம் தற்போதைய சூழ்நிலையில் இந்திய வலியுறுத்தல் இல்லாத காரணத்தினால் கொழும்பினால் இலகுவாக கைவிடப்படக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

அதாவது புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போது மாகாண சபை முழுமையை தேசிய மக்கள் சக்தி அரசு அடியோடு கைவிட்டால், இந்தியா அதனைத் தட்டி கேட்காது என்பது உறுதியாகி வரும் சூழலில் அந்த வழிமுறையை - 13 ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபை முறையை - அந்த அரசு இலகுவாக புறமொதுக்கிக் கைவிடும் சூழல் கிட்டியிருப்பதாகத் தெரிகிறது.

இத்த பின்புலத்தில் தற்போதைய அரசு புதிய யாப்பை உருவாக்கும் போது, அது நிச்சயம் தமிழர்களுக்கு நெருக்கடி தருவதாக - அவர்களின் விருப்புக்கு மாறானதாக - அவர்களை திருப்தி செய்யாததாக - அவர்களின் அபிலாசைகளை நிறைவு செய்யாததாக - அமையக்கூடிய சாத்தியங்கள் அதிகம் உண்டு.



# தென்மராட்சி கரம்பகத்தில் விவசாய வீதியில் இரவோடு இரவாக பெருமளவு மணல் அகழ்வு

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டம்





(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரம்பகம் ஜே/330 கிராமத்தில் உள்ள விடத்தற்பளை-கரம்பக பிள்ளையார் இணைப்பு வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் பெருமளவு மணல் அகழப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் காலை வேளையில் கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

குடிமனைகள் அற்ற தோட்டங்களுக்குச் செல்லும் மணல் வீதி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் 25க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் ஜே.சி.பி. வாகன உதவியுடன் சட்டவிரோத துணிகரமாக மணல் அகழ்வு இடம்பெற்றிருப்பதாக அப்பகுதி விவசாய மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கரம்பகம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற போதிலும் உரிய திணைக்களங்கள் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையிலேயே எமது தோட்டப் பாதையில் அதிகளவான மணல் இரவோடு இரவாக அகழப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்தால் எமது விவசாய நடவடிக்கைகள் மற்றும் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் மற்றும் ஆளுநரிடம் முறைப்பாடு செய்யவுள்ளோம். - என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

# பண்டிகை காலத்தில் கோழி இறைச்சி முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம்



பண்டிகை காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைக்கான தட்டுப்பாடு ஏற்படாதென அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

போதுமான கையிருப்பின் ஊடாக தேவைக்கேற்ப சந்தை விநியோகம் இடம்பெறுவதாக சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கிலோகிராம் குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சியை 1000 ரூபாவுக்கும் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியுமென அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர கூறியுள்ளார்.

முட்டையொன்றின் விலை 31 ரூபா முதல் 33 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# யாழ். மாவட்டத்துக்கு வெளியே பணியாற்றாத ஆசிரியர்களுக்கு வெகுவிரைவில் இடமாற்றம்

## அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான ஆசிரியர்கள் இருப்பதால், வெளிமாவட்டங்களில் அவர்கள் மீண்டும் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் மீண்டும் பணிபுரிய வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், ஒருபோதும் வெளிமாவட்டங்களில் பணியாற்றாதவர்களை விரைவில் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெளிமாவட்டங்களில் கடமை புரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள், வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

வெளிமாவட்டங்களில் தாம் நீண்ட காலம் பணியாற்றுவதாகவும், செல்வாக்குகளின் அடிப்படையில் சிலர் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டிய அவர்கள், தமக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள் கூட சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள நிலையில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஆளுநரிடம் முறையிட்டனர்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும் என்றும், அவ்வாறு இதுவரை பணியாற்றாத ஆசிரியர்கள் இருப்பின் உரிய நடைமுறைக்கு அமைவாக அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என்றும் இதன்போது ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, உரிய காரணங்கள் இல்லாமல் இடமாற்றங்களை வழங்க முடியாது என்று கூறிய ஆளுநர், வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு ஆசிரியர் ஒருவர் இடமாற்றப்படும்போது அதே பாடத்துக்குரிய ஆசிரியர் வெள மாவட்டத்துக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படும் என்றும் ஆளுநர் மேலும் கூறினார்.



# ஜனாதிபதி அலுவலகத்தில் நத்தார் கெரோல் இசை

ஜனாதிபதி அலுவலகம், முப்படையினர், பொலிஸார் இணைந்து வருடாந்தம் நடத்தும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி, தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நத்தார் கெரோல் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலக வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு இலங்கை இராணுவத்தின் பாடல் குழு மற்றும் இசைக் குழுவினரால் நேற்று முன்தினம் நத்தார் கெரோல் கச்சேரி நிகழ்த்தப்பட்டது.

இந்த கிறிஸ்மஸ் கெரோல் இசை நிகழ்ச்சி எதிர்வரும் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி வரை தினமும் இரவு 7.00 மணி முதல் ஜனாதிபதி செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கெரோல் இசை நிகழ்ச்சியை நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் நஜித் இந்திக்க, லக்மாலி ஹேமச்சந்திர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.



# முன்னாள் ஜனாதிபதிகளின் முப்படை பாதுகாப்பு நீக்கம்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த முப்படை வீரர்களை நேற்று முதல் அமுலாகும் வகையில் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் முப்படைத் தளபதிகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக இன்று முதல் பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுவார்கள் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் போதுமான அளவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் 6 மாதங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டு பாதுகாப்பு நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

# 3ஆம் தவணையின் 2ஆம் கட்டம் ஜனவரி 02 ஆம் திகதி ஆரம்பமாகும்



அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் கல்வி செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி 02ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான கல்வி செயற்பாடுகள் ஜனவரி 24 ஆம் திகதியுடன் நிறைவடையும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# நவம்பர் மாதத்தின் ஏற்றுமதி வருமானம் 1269.33 மில்லியன் அமெரிக்க டொலர்

இலங்கை சுங்கத்தின் தரவுகளுக்கமைய, கடந்த நவம்பர் மாதம் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1269.33 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 0.04 சதவீத அதிகரிப்பாகும்.

அதேநேரம், கடந்த நவம்பர் மாதம் வர்த்தக பொருள் ஏற்றுமதி 943.1 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவானது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 5.6 சதவீத வீழ்ச்சியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பர் சார்ந்த உற்பத்தி, உணவு மற்றும் குளிர்பானம் மற்றும் கடலுணவு ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.



# அரிசி இறக்குமதிக் கால அவகாசத்தை நீட்டிக்கும் எதிர்பார்ப்பில் அரசாங்கம்

அரிசி இறக்குமதிக்கான கால அவகாசத்தை எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான யோசனை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

அரிசி தொகை சுங்கத்திற்கு வந்தாலும் அமைச்சரவையின் தீர்மானம் வரும் வரை அவற்றை விடுவிக்கக்கூடிய இயலுமை இல்லை என சுங்கத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

அதேநேரம் அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 5,200 மெற்றிக் டன் அரிசி கையிருப்பு தொகை இன்று இலங்கையை வந்தடையவுள்ளது.

மேற்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாவிட்டால், அரிசி இருப்புக்களை வெளியிட முடியாத நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அமைச்சரவையில், வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.



# வகவத்தை உப மின்னுற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பு

2,300 மில்லியன் ரூபா முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்ட வகவத்தை உப மின்னுற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டு சபையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மின்னுற்பத்தி நிலையம் ஊடாக உற்பத்தி செய்யப்படும் 90 மெகாவட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டு சபையின் வகவத்தை மற்றும் மில்லனிய கைத்தொழில் வலயங்களுக்கு மின் சாரத்தை விநியோகிப்பதற்காக இந்த உப மின்னுற்பத்தி நிலையம் நிர்மா ணிக்கப்பட்டது.



# சட்டவிரோத மின் வேலியால் 50 யானைகள் உயிரிழப்பு!

சட்டவிரோத மின்சார வேலிகளால் யானைகளுக்கு ஏற்படும் உயிரிழப்பினை தவிர்ப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என இலங்கை மின்சார சபை வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆண்டில், சட்டவிரோத மின் வேலிகள் மற்றும் கம்பி இணைப்புகளின் காரணமாக 50 யானைகள் வரை உயிரிழந்துள்ளன என புள்ளிவிப ரங்கள் தெரிவிக்கின்றன.

புராதனக் காலம் முதல் சமய ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்ற யானைகள் சுற்றுலாப் பயணிகளால் அதிகளவில் விரும்பப்படுகின்றன.

எனவே, பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்கின்ற யானைகளைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பை வழங்குமாறு இலங்கை மின்சார சபை அறிக்கையொன்றை வெளியிட்டு கோரியுள்ளது.

இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரத்தைக் கொண்டு சட்டவிரோதமாக அமைப்படும் மின்சார வேலிகள் மற்றும் மின் இணைப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க 0112 118 767 அல்லது 1987 என்ற துரித இலக்கத்தை தொடர்புகொள்ளுமாறு இலங்கை மின்சார சபை அறிவித் துள்ளது.



# யாழில் புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வு

டான் தொலைக்காட்சி குழுமத்தால் ஆண்டுதோறும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தை மின்விளக்குகளால் அலங்கரித்து, புத்தாண்டை வரவேற்கும் ஆரம்ப நிகழ்வில் நேற்று திங்கட்கிழமை மாலை கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மின்விளக்குகளை ஒளிரச் செய்து அதனை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபனும் பங்கேற்றார்.









# ஜெயலலிதா ஆட்சியை மீண்டும் அமைப்பேன்

## சசிகலா தெரிவிப்பு



"தி.மு.க. அரசிடமிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற முனைப்போடுதான் எனது ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்து வருகிறேன். தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சி மீண்டும் அமையும், அமைப்பேன்."

– இவ்வாறு சசிகலா தெரிவித்துள்ளார்.

நத்தார் தினத்தையொட்டி சென்னை கீழ்ப்பாக்கம் ஹால் வீதியில் உள்ள நேர்ச்சை திருத்தல மாதா தேவாலயத்தில் சசிகலா நேற்று சிறப்பு வழிபாடு நடத்தினர். தொடர்ந்து கருணை இல்லத்தில் முதியவர்கள் உடன் இணைந்து கேக் வெட்டி அனைவருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முதியோருக்கு உணவும் பரிமாறினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"பணி செய்யும் பெண்களுக்கான தங்கும் விடுதி திட்டத்தை கடந்த 2013 ஆம் ஆண்டு ஜெயலலிதா செயல்படுத்தினார். திமுக ஆட்சியில் பெயரை மாற்றி 'தோழி' என்ற புதிய திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இடைத்தேர்தல் அறிவிக்கப்பட உள்ள ஈரோட்டுக்கு சென்று முதல்வர் ஸ்டாலின் மக்களுக்கு மழை நிவாரணம் வழங்கினார். அவருக்கு மக்கள் மீது அக்கறை இருந்தால் பாதிக்கப்பட்ட மற்ற இடங்களிலும் நிவாரணம் வழங்கியிருக்க வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்கு சீருடை, புத்தகங்கள் ஆகியவை முறையாக வழங்கப்படுவதில்லை. ஜெயலலிதா ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட மடிகணினி, சைக்கிள் ஆகியவை கொடுக்கப்படவில்லை. மாணவர்களுக்கு புத்தகம் கூட வழங்காமல் பழைய புத்–தகத்தை வாங்கி படிக்கும் நிலையே தற்போது தமிழகத்தில் உள்ளது. ஆண்டுக்கு 100 நாள் சட்டப்பேரவையை நடத்துவதாக தி.மு.க. தெரிவித்தது. ஆனால் 4 ஆண்டுகள் கடந்தும் 134 நாள்கள் மட்டுமே சட்டப்பேரவை நடத்தப்பட்டுள்ளது.

ஜெயலலிதா ஆட்சி காலத்தில் கேரளாவிலிருந்து மருத்துவக் கழிவுகள் தமிழகத்தில் கொட்டப்படுவது இல்லை. தி.மு.க. ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளாக தமிழக கேரள எல்லையில் பாதுகாப்பு முறையாக மேற்கொள்ளவில்லை அதன் காரணமாக தமிழகத்தில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகிறது. விவகாரம் நீதிமன்றம் வர சென்றதால் நடவடிக்கை எடுப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

தி.மு.கவின் கணக்கெல்லாம் தமிழக மக்களிடம் செல்லாது. அ.தி.மு.கவின் வாக்கு வங்கி குறையவில்லை. தி.மு.க. அரசிடமிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற முனைப்போடுதான் எனது ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்து வருகிறேன். தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சி மீண்டும் அமையும், அமைப்பேன்."– என்றார்.

# பத்து லட்சம் இளைஞர்களுக்கு ஒன்றரை ஆண்டில் அரச வேலை

## பிரதமர் மோடி பெருமிதம்

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தர அரசு வேலைகளைத் தனது தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, பிரதமர் மோடி பணி நியமன உத்தரவுகளை வழங்கி வருகிறார். அந்த வகையில், நேற்று 71 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு, காணொலி காட்சி வாயிலாக பணிநியமன ஆணைகளை பிரதமர் மோடி வழங்கி வைத்துள்ளார்

இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர் மோடி,

"நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல, இளைஞர்களின் திறமைகளை வளர்ப்பது அவசியம். இதற்கான பொறுப்பு நாட்டின் கல்வித் துறையிடம் உள்ளது. புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப ஒரு நவீன கல்வி முறை இங்கு அவசியம்.

அதனை நாடு தற்போது உணர்ந்துள்ளதுடன் தேசிய கல்விக் கொள்கையின் மூலம், நாடு இப்போது அந்த திசையில் நகர்ந்துள்ளது. முன்னதாக, பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாக, கல்வி முறை பெரும்பாலும் மாணவர்களுக்கு சுமையாகவே மாறியிருந்தது. ஆனால் இப்போது அவர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு நிரந்தர அரசு வேலைகளை தனது தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

அத்துடன், நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஆள்சேர்ப்பு செயல்முறை நடத்தப்படுகிறது. முன்னதாக, கிராமப்புற, தலித், பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி சமூகங்களை சேர்ந்த இளைஞர்களுக்கு மொழி பெரும் தடையாக இருந்தது.

ஆனால் இப்போது, தாய் மொழியில் பாடங்களை கற்பிக்கவும், தேர்வுகளை நடத்தவும் கொள்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும், 13 மொழிகளில் தேர்வுகளை எழுதுவதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளோம்.



மேலும் பெரும்பாலான இளைஞர்களுக்கு விவசாயத் துறையில் வேலை கிடைத்துள்ளது. அவர்கள் விரும்பிய பணிகளையும் மேற்கொள்ள வாய்ப்பு உருவாகியுள்ளது. இன்று ஆயிரக்கணக்கான பெண்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டது. உங்கள் வெற்றி மற்ற பெண்களுக்கு ஊக்கமளிக்கும் என்றும் பெண்களை எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெறச் செய்வதே எங்கள் முயற்சி."– என்றார்.

# பனாமா கால்வாயை அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவேன்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், பனாமா கால்வாயை மீண்டும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவுள்ளதாக அறிவித்துள்ளார்.

மத்திய அமெரிக்கா ஊடாக செல்லும் அமெரிக்கக் கப்பல்கள் மற்றும் ஏனைய கப்பல்கள் மீது பனாமா அதிக வரியை விதிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அரிசோனா மாநிலத்தில் நடைபெற்ற பேரணியில் பனாமா கால்வாயில் சீனாவின் செல்வாக்கு குறித்து எச்சரிக்கும் வகையில் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் இதனைத் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிகழ்விற்குப் பிறகு, அவர் பனாமா கால்வாய் மீது அமெரிக்கக் கொடியின் படம் இருக்கும் வகையிலான புகைப்படத்தை தமது சமூக ஊடகத்தில் பதிவிட்டு அமெரிக்கக் கால்வாய்க்கு வரவேற்கிறோம் என குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்யாவின் 52 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியது உக்ரைன் விமானப் படை





ரஷ்ய படைகளின் ஆளில்லா விமான தாக்குதலை உக்ரைன் விமானப் படைமுறியடித்து உள்ளது.

ஷாகித் ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட ஆளில்லா விமானங்களை கொண்டு ரஷ்யா வான்வழி தாக்குதலில் ஈடுபட்டு உள்ளது. இதில், 103 ஆளில்லா விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன.

அவற்றில், 52 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தி விட்டோம் என உக்ரைன் தெரிவித்து உள்ளது.

தலைநகரான கீவ்வின் புறநகரான ப்ரோவரியில், விழுந்த ட்ரோன் குப்பைகள் ஒரு குடியிருப்பு கட்டடத்தை தாக்கி, கூரை மற்றும் மின் தூக்கியை தீயில் எரித்தது.

இந்த தாக்குதல் ரஷ்யாவின் தொடர்ச்சியான வான்வழி பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.

எனினும், இந்த தாக்குதலில் உக்ரைனில் உள்ள தனியார் சொத்துகள் மற்றும் பொதுமக்களின் உட்கட்டமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஷேக் ஹசீனாவை நாடு கடத்தும்படி இந்தியாவிடம் பங்களாதேஷ் கோரிக்கை



பதவி நீக்கம் செய்யப்பட்ட பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்தும் படி பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம், இந்தியாவை இராஜதந்திர ரீதியாக கோரியுள்ளது.

16 ஆண்டு காலமாக ஆட்சி செலுத்திய அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதன் பின்னர் கடந்த ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முதல் இந்தியாவில் வசித்து வருகிறார்.

இந்தநிலையில், ஷேக் ஹசீனா, அவரது அமைச்சர்கள், ஆலோசகர்கள் மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் உள்பட இனப்படுகொலையில் ஈடுபட்டார்கள் என டாக்காவை தளமாகக் கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், குற்றம் சாட்டியுள்ளது.

இவர்களுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 24.12.2024




இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத் தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்து வீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித் தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாக வும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்த மான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணி யாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம் படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷ யத்தில் கவனம் தேவை.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படு வதைக் குறைத்துக் கொண்டு, உங்க ளுக்கு விருப்பமான விடயங்களுக் காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாடப் பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்று வீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாகக் கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப் படாது.




இன்று தியானம் அல்லது பிரார்த் தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம். மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த் தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தைச் சிறப்பாகக் கையாண்டால் தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்த இயலும்.




எந்த விடயத்தையும் லேசாக எடுத் துக்கொள்ளவேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணி யாற்றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்க லாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள் வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகை யில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள் அடிப்படைத் தேவை களை எளிதாகச் சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதுக்கு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியா னம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப் பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசித் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற் படும்.




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழை- ப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ள வும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விடயத்தைப் பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறை யாகத் திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங்கள் பணி யைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்க ளின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தைச் சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.12.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்துக்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப்படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம்.




நீங்கள் இன்று உணர்வு பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விடயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park